| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்: 18 நாள்:12.07.2021

***கிருஷ்ணகிரி மாவட்டம்***

***மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் "உலக மக்கள் தொகை தினம்" உறுதிமொழியினை அனைத்து அரசு துறை அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர்.***

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (12.07.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் **"உலக மக்கள் தொகை தினம்"** உறுதிமொழியினை கொரோனா நோய் தொற்று தடுப்பு நெறிமுறைகளை கடைபிடித்து அனைத்து அரசு துறை அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர்.

1989-ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும், ஜுலை 11 -ம் நாள் உலக மக்கள் தொகை தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இந்த ஆண்டு (11.07.2021) அன்று **"கருவுறுதலில் கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம்"** என்ற கருப்பொருளுடன், உலக மக்கள் தொகை தினம் அனுசரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, 11.07.2021 அன்று விடுமுறை நாள் என்பதால், அதற்கு அடுத்த அலுவலக நாளான இன்று (12.07.2021) உலக மக்கள் தொகை தின உறுதிமொழியினை ஏற்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தினம் உறுதிமொழியான, "நமது தாய்நாட்டின் மொத்த மேம்பாட்டிற்கும், தாய்மார்களின் நல்வாழ்விற்கும், குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் மக்கள் தொகை பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துதல் முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும் என்பதை நான் அறிந்துள்ளேன்.

சிறுகுடும்ப நெறி, திருமணத்திற்கேற்ற வயது, முதல் குழந்தையை தாமதப்படுத்த மேற்கொள்ள வேண்டிய குடும்ப நலமுறைகள், முதல் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் இடையே தேவையான இடைவெளி, ஒரு பெண் கருவுற்ற காலத்தில் வீட்டில் மேற்கொள்ள வேண்டிய சாதகமான சூழ்நிலையை உருவாக்குதல், தாய் சேய் நலத்தை பாதுகாத்தல், பெண் கல்வியை மென்மேலும் ஊக்குவித்தல், ஆணும் பெண்ணும் சமம் என்பதற்கு செயல் வடிவம் கொடுத்தல், பெண் சிசுக் கொலையை தடுத்தல், இளம் வயது திருமணத்தை தடுத்தல், இளம் வயது கர்ப்பத்தை தடுத்தல், மக்கள் தொகை

பெருக்கத்தினால் ஏற்படும் தாக்கத்தை குறைத்தல், சுற்றுப்புற சூழல் பாதிப்பை தடுத்தல், மரம் வளர்ப்பதை ஊக்குவித்தல், வறுமை ஒழிப்பு போன்ற செய்திகளை அனைவருக்கும் எடுத்துக் கூறுவதில் என்னை நான் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வேன் என உறுதி அளிக்கிறேன்.

குடும்பநலத் திட்டங்களை மக்கள் இயக்கமாக மலரச் செய்ய என்னை நான் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வேன் எனவும் உறுதியளிக்கிறேன். என்னுடைய இந்த முயற்சிகள் வெற்றியடைய இயற்கை எனக்கு துணை நிற்கட்டும்.

தன்னம்பிக்கையும், தற்சார்பும் கொண்ட நம் நாட்டு மக்களுக்கு நெருக்கடியான சூழலிலும் குடும்ப நலதிட்ட சேவைகளை வழங்குவதை உறுதி செய்வோம் எனவும் உளமார உறுதி கூறுகிறேன்" என அனைத்து அரசு அலுவலர்களும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பி.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், மாவட்ட விரிவாக்க கல்வியாளர் திரு.ஆ.தமிழ்வாணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) திரு.ராஜகோபால் உட்பட அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |

PRO-KGI